Literacy for a Billion

Movie: Duet
Year: 1994

Song: En Kadhalae
Lyricist: Vairamuthu

என் காதலே என் காதலே
என்னை என்ன
செய்ய போகிறாய்
நான் ஓவியன்
என்று தெரிந்தும் நீ
ஏன் கண்ணிரண்டை கேட்கிறாய்
சிலுவைகள் சிறகுகள்
ரெண்டில் என்ன
தரப்போகிறாய்
கிள்ளுவதை கிள்ளிவிட்டு
ஏன் தள்ளி நின்று பார்க்கிறாய்
என் காதலே என் காதலே
என்னை என்ன
செய்ய போகிறாய்
நான் ஓவியன்
என்று தெரிந்தும் நீ
ஏன் கண்ணிரண்டை கேட்கிறாய்
காதலே நீ பூவெறிந்தால்
எந்த மலையும்
கொஞ்சம் குழையும்
காதலே நீ கல்லெறிந்தால்
எந்த கடலும்
கொஞ்சம் கலங்கும்
இனி மீள்வதா
இல்லை வீழ்வதா
உயிர் வாழ்வதா
இல்லை போவதா
அமுதென்பதா விஷமென்பதா
உன்னை அமுதவிஷமென்பதா
என் காதலே என் காதலே
என்னை என்ன
செய்ய போகிறாய்
நான் ஓவியன்
என்று தெரிந்தும் நீ
ஏன் கண்ணிரண்டை கேட்கிறாய்

*Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.*

*PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.*